B

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள்:90

### பகுதி – அ

20x1=20

I சரியான விடையைத் தெரிவு செய்க.

1. மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்
அ) ஆடம் ஸ்மித் ஆ) இலயனல் ராபின்ஸ் இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) சாமுவேல்சன்
2. பொருளாதாரத்தின் தந்தை யார்?
அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம் ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால் சாமுவேல்சன்
3. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு ______
அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக
4. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் ______
அ) பெர்கூசன் ஆ) கீன்ஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) மார்ஷல்
5. சராசரி உற்பத்தி (AP) யைக் கணக்கிட பயன்படுத்தும் விகிதம்
அ) $\frac{\Delta TP}{N}$ ஆ) $\frac{\Delta TP}{\Delta N}$ இ) $\frac{TP}{MP}$ ஈ) $\frac{TP}{N}$
6. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்
7. சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு
அ) $\frac{TC}{Q}$ ஆ) $\frac{TVC}{Q}$ இ) $\frac{TFC}{Q}$ ஈ) $\frac{TAC}{Q}$
8. மொத்த மாறாச் செலவு 100, மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.
அ) 125 ஆ) 175 இ) 225 ஈ) 325
9. முற்றுரிமையில் MR கோடு ______ கோட்டிற்கு கீழிருக்கும்.
அ) TR ஆ) MC இ) AR ஈ) AC
10. விற்பனை செலவிற்கு உதாரணம்
அ) கச்சாப்பண்டம் விலை ஆ) போக்குவரத்துச் செலவு
இ) விளம்பரச் செலவு ஈ) கொள்முதல் செலவு
11. உழைப்பாளருக்கான வெகுமதி ______
அ) வாரம் ஆ) கூலி இ) இலாபம் ஈ) வட்டி
12. இலாபம் இதற்கான வெகுமதி ஆகும்.
அ) நிலம் ஆ) அமைப்பு இ) மூலதனம் ஈ) உழைப்பு
13. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்
அ) நான்கு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) பத்து
14. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியாசென் பெற்ற ஆண்டு
அ) 1998 ஆ) 2000 இ) 2008 ஈ) 2010
15. இரயத்வாரி முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்
அ) கேரளா ஆ) வங்காளம் இ) தமிழ்நாடு ஈ) மகாராஸ்டிரா
16. வெளிநாட்டு முதலீடு ______ உள்ளடக்கியது.
அ) FDI மட்டும் ஆ) FPI மற்றும் FFI இ) FDI மற்றும் FPI ஈ) FDI மற்றும் FFI

17. MUDRA வங்கி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக.
அ) 2000 ஆ) 2005 இ) 2010 ஈ) 2015
18. SPIC அமைந்துள்ள இடம்
அ) சென்னை ஆ) மதுரை இ) தூத்துக்குடி ஈ) புதுக்கோட்டை
19. $(y-y_1)=m(x-x_1)$ என்பது ______ குறிக்கும்.
அ) சாய்வு ஆ) நேர்க்கோட்டை இ) மாறிலியை ஈ) வளைகோட்டை
20. x+y=5, x-y=3 என்றால் x–ன் மதிப்பு ______ ஆகும்.
அ) 4 ஆ) 3 இ) 16 ஈ) 8

## பகுதி – ஆ

**II ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**வினா எண் – 30 க்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.** 7x2=14

21. பயன்பாட்டின் வகைகளைக் கூறு.
22. நுகர்வோர் எச்சம் காணும் சூத்திரம் எழுதுக.
23. மூழ்கும் செலவு (அல்லது) அமிழ்த்தப்பட்ட செலவு என்றால் என்ன ?
24. பணக்கூலி மற்றும் உண்மைக்கூலியை வேறுபடுத்துக.
25. இயற்கை வளங்களைப் பற்றி குறிப்பு வரைக.
26. மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிட உதவும் குறியீடுகளை கூறுக.
27. தனியார் மயமாக்கல் என்றால் என்ன ?
28. ஊரக வளர்ச்சி என்றால் என்ன ?
29. தமிழ்நாட்டுக் கேற்ற நான்கு உணவுப் பயிர்களை குறிப்பிடுக.
30. 62=34+4x என்றால் x–ன் மதிப்பு காண்க.

## பகுதி – இ

**III ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**வினா எண் – 40 க்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.** 7x3=21

31. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை ?
32. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
33. மாறாச் செலவு மற்றும் மாறும் செலவு – வேறுபடுத்துக.
34. அங்காடியின் இயல்புகள் யாவை ?
35. வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
36. குளிர்பதன கிடங்கு பற்றி விவரிக்க.
37. மண்டல ஊரக வங்கி பற்றி குறிப்பு வரைக (RRB).
38. தமிழ்நாட்டிலுள்ள புதுபிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை ?
39. MS Excel Sheet செயல்படுத்துவதில் உள்ள நிலைகளை விளக்குக.
40. வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.

## பகுதி – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 7x5=35

41. அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி.
(அல்லது)
ஆ) இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.
42. அ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.
(அல்லது)
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43. அ) சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி.

(அல்லது)

ஆ) வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி.

44. அ) மொத்த செலவு $=10+Q^3$, $Q=5$ எனில் TFC, TVC, TC, AFC, AVC, AC ஆகியவற்றைக் காண்க.

(அல்லது)

ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.

45. அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

(அல்லது)

ஆ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவாதி.

46. அ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.

47. அ) ஊரக பொருளாதார பிரச்சனைகள் ஆராய்க.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி.

***/***

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

11

# VELLORE DISTRICT
## அரையாண்டுத் தேர்வு – டிசம்பர் - 2023
## பொருளியல்
## KEY ANSWER

**Prepared by**
**C.SUDHAKAR** GBHSS USSOOR
**K. SUDHAKAR** GHSS PANAMADANGI

1. இ) ஆல்பிரட் மார்ஷல்
2. ஆ) ஆடம் ஸ்மித்
3. ஆ) உச்சமாக
4. ஈ) மார்ஷல்
5. ஈ) TP/N
6. ஆ) நேர்மறை
7. ஆ) TVC/Q
8. இ) 225
9. இ) AR
10. இ) விளம்பரச் செலவு
11. ஆ) கூலி
12. ஆ) அமைப்பு
13. ஆ) ஏழு
14. அ) 1998
15. இ) தமிழ்நாடு
16. இ) FDI &FPI
17. ஈ) 2015
18. இ) தூத்துக்குடி
19. ஆ) நேர்க்கோட்டை
20. அ) 4

### பகுதி-ஆ

21. 1.இடப் பயன்பாடு 2.வடிவ பயன்பாடு 3.கால பயன்பாடு 4.சேவை பயன்பாடு 5.உடைமை பயன்பாடு 6.அறிவு பயன்பாடு

22. நுகர்வோர் எச்சம் = தகுவிலை - உண்மை விலை
TU- (PxQ) Tu- மொத்த பயன்பாடு P- விலை Q- பண்ட அளவு

23. மீட்டு எடுக்க முடியாத கடந்த கால செலவுகள் அமைழ்த்தப்பட்ட செலவுகள் ஆகும்

24. **பணக்கூலி** அல்லது பெயரளவு கூலி என்பது ரொக்கமாக வழங்கப்படும் பணம் கூலியை குறிக்கும்
**உண்மை கூலி** பண்டங்களாகவோ பணிகளாகவோ கூலியை வழங்குவது உண்மை கூலியாகும்

25. ஒரு நாட்டில் இயற்கையில் இருந்து பெறப்படும் பழங்கள் இயற்கை வளங்கள் காடு, நீர், கனிம வளங்கள் மற்றும் ஆற்றல் சக்திகள் ஆகியன முக்கிய இயற்கை வளங்கள் ஆகும்

26. 1.வாழ்நாள் குறியீடு 2. கல்வி குறியீடு 3. வாழ்க்கை தர குறியீடு கொண்டு கணக்கிடப்படுகிறது

27. பொதுத்துறை நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதை குறிக்கும்

28. ஊரக வளர்ச்சி என்பது, ஊரக பகுதிகள், ஊரக மக்கள், ஊரக வாழ்க்கை ஆகியவற்றை மேம்படுத்தும் முறையாகும்

29. 1. நெல் 2. கம்பு 3. சோளம் 4. நிலக்கடலை 5. சிறுதானியங்கள்

30. $62=34+4x$
$34+4x=62$
$4x=62-34$
$X=28/4$
$X=7$

www.Padasalai.Net

## பகுதி-இ

31. 1. வலது புறமாக கீழ் நோக்கி சரிந்து செல்லும்
2. தோற்றுவை நோக்கி குவிந்து காணப்படும்
3. ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது

32. 1. துவக்க பணி 2.புத்தாக்க பணி 3. ஒருங்கிணைத்தல் 4. கட்டுப்படுத்துதல் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையிடுதல் 5. இடர்பாடுகளை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மை

33. **மாறாச் செலவு**
உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை. செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும். **எ. கா** வாடகை ஊதியம் இன்சூரன்ஸ்
**மாறும் செலவு**
உற்பத்தி மாறுபடுவதற்கேற்ப மாறுபடும் செலவுகள் மாறிக்கொண்டே இருக்கும். **எ. கா** எரிபொருள் மின்சாரம் கச்சா பொருள் செலவு

34. 1. வாங்குபவர்களும் விற்பவர்களும் இருக்க வேண்டும்
2. வாங்குவதற்கும் விற்பதற்கும் ஒரு பொருள் இருக்க வேண்டும்
3. விலை இருக்க வேண்டும்
4. நேரடியாகவோ அல்லது மறைமுகமாக பரிமாற்றம் இருக்க வேண்டும்

35. 1. சமூக நலத்தை அடைவதே முதன்மையான நோக்கம்
2. வேளாண்மை சிறுதொழில் மற்றும் குடிசை தொழில் விரிவு படுத்துவதற்கும் நிதி தேவைப்பட்டது
3. தனியார் முட்டுரிமையை கட்டுப்படுத்துவதற்காக
4. வங்கிகள் இலகுவாக கடன் அளிப்பதற்கும் பேரு உதவியாக இருந்தன
5. வருமான ஏற்றத்தாழ்வுகளை கட்டுப்படுத்த உதவுகின்றன

36. 1. பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது
2. விரைவில் அழுகும் தன்மை உடைய இப்பண்டங்களை சந்தைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன
3. இந்த பிரச்சினையை சமாளிக்க இந்திய அரசு மற்றும் வேளாண்மை அமைச்சகம் அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி குளிர்பதன கிடங்கு ஆணை 1964 என்பதை ஏற்படுத்தியது

37. 1. ஊரக பொருளாதாரம் மேம்பாடு அடைய வட்டார ஊரக வங்கிகள் பரிந்துரைக்கப்பட்டன
2. மத்திய மாநில அரசுகள் மற்றும் வணிக வங்கிகளின் கூட்டு முயற்சியால் உருவானது வட்டார ஊரக வங்கிகள் மேலும் சிறு மற்றும் குரு விவசாயிகளுக்கு கடன் உதவி செய்வது
3. தற்போது இந்தியாவில் 64 வட்டார ஊரக வங்கிகள் உள்ளன
4. பொருளாதாரத்தில் நலிவடைந்தோர்க்கு மட்டுமே RRB கடன் வழங்குகிறது வட்டி விகிதம் குறைவு

38. 1. புனல் மின்சாரம் தமிழ்நாட்டில் 20க்கும் மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது குந்தா, மேட்டூர் ,மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமானவை ஆகும்
2. சூரிய சக்தி மின்சாரம் தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது தென் தமிழகம் சூரிய மின்சக்தி திட்டங்களை செயல்படுத்த உகந்த மண்டலமாக கருதப்படுகிறது
3. காற்றாலை மின்சாரம் இந்திய அளவில் தமிழ்நாடு அதிக அளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பை கொண்ட மாநிலமாக உள்ளது மேலும் காற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்க திருநெல்வேலி தூத்துக்குடியின் தெற்கு பகுதி மற்றும் ராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன

www.Padasalai.Net www.TrbTnpsc.com

39. 1. Click start –program-microsoft Excel
2. Desktop Ms Excel ஐ இரு முறை கிளிக் செய்ய வேண்டும்

40. 1. வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே ஆகும். **டேவிட் ரிக்கார்டோ**
2. இயந்திரங்களில் இருந்தும் உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளில் இருந்தும் பெறப்படும் வருமானமே போலிவாரம் எனப்படும். **மார்ஷல்**

## பகுதி-ஈ

**41. அ.)**

**I.பொருளியலின் தன்மைகள்:**

**1. ஆடம் ஸ்மித்தின் செல்வ இலக்கணம்.**

நாடுகளின் செல்வம் என்ற நூலில் பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல் என விளக்கியுள்ளார்.

**2. ஆல்பிரட் மார்ஷலின் நல இலக்கணம்.**

பொருளியல் கோட்பாடுகள் என்ற நூலில் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும் மறுபுறம் மனிதர்களைப் பற்றியும் ஆய்வு செய்கின்ற இயல் என குறிப்பிடுகிறார்.

**3. இலயனல் ராபின்சனின் பற்றாக்குறை இலக்கணம்.**

விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளை பற்றிய ஓர் அறிவியல் ஆகும்.

**4. பால் சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணம்.**

மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்தி தற்கால மற்றும் எதிர்கால நுகர்வுக்காக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை பற்றி பயிலும் ஒரு சமூக அறிவியல் ஆகும் எனக் குறிப்பிடுகிறார்.

**II.பொருளியலின் எல்லை**

**பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்**

பொருளியல் பிரச்சனைகளுக்கான காரண-விளைவுகளுக்கு இடையே உள்ள உறவுகளைப் பற்றி ஆராய்கிறது. ஆகையால் பொருளியல் கலை மற்றும் அறிவியலாக கருதப்படுகிறது.

**பொருளியல் இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரைஅறிவியல்**

1. உள்ளதை உள்ளவாறு கூறுவது இயல்புரை அறிவியல்.

2. நெறியுரை அறிவியல், எதுவாக இருக்க வேண்டும் என்ற வினாவிற்கு விடை அளிப்பதாக உள்ளது.

**41. ஆ)**

**1. இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்**

தனியார் துறையும் பொது துறையும் இணைந்து சீரிய முறையில் செயல்படுவது.

**2. வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது**

இந்தியாவில் 60% மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இந்தியாவில் 17% மொத்த உள்நாட்டு உற்பத்தி வேளாண்துறையில் இருந்தே கிடைக்கிறது.

**3. வளர்ந்து வரும் சந்தை**

முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையே இந்தியாவின் சந்தை பிற நாடுகளுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இந்தியா குறைந்த முதலீட்டில் அதிகமான வளர்ச்சி சாத்தியங்களை கொண்டுள்ளதால் நம் நாடு வேகமாக வளர்ந்து வரும் சந்தையாக மாறியிருக்கிறது.

**4. வளர்ந்து வரும் பொருளாதாரம்**

விரைவான பொருளாதார வளர்ச்சியின் விளைவாக இந்திய பொருளாதாரம் G20 நாடுகளில் இடம் பெற்றுள்ளது.

**5. வேகமாக வளரும் பணிகள் துறை**

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்கு பணிகள் துறையின் பங்களிப்பாகும். தகவல் தொழில்நுட்பம், BPO போன்ற தொழில்நுட்ப சேவைகள் பேரளவு வளர்ச்சி பெற்றுள்ளது.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**6. மக்கள் தொகை-பகுப்பு**

இந்திய மனித வளம் இளைஞர்களால் நிரம்பியுள்ளது. இந்திய இளைஞர்களின் திறமை மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் காரணமாக பொருளாதார வளர்ச்சி உச்சத்தை எட்டியுள்ளது. இது வெளிநாட்டு முதலீட்டையும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளையும் ஈர்க்கிறது.

**42. அ.)**

ஆஸ்திரிய பொருளியல் வல்லுநரான H.H. காசன் என்பவர் இவ்விதியை 1854-இல் பொருளியலில் முதன்முதலாக உருவாக்கினார். எனவே ஜெவான்ஸ் இவ்விதியை "காசனின் முதல் நுகர்வு விதி" என அழைத்தார்.

**இலக்கணம்.**

"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

**எடுகோள்கள்.**

1. பயன்பாட்டை அளவிட முடியும்.
2. பணத்தின் இறுதிநிலை பயன்பாடு மாறாது.
3. பண்டங்கள் ஒரே தரமானவை.
4. கால இடைவெளி இன்றி தொடர்ந்து நுகர வேண்டும்.
5. பழக்கவழக்கங்கள் மற்றும் வருமானத்தில் மாற்றமில்லை.

**விதியின் எடுத்துக்காட்டு விளக்கம்.**

ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார். முதல் ஆப்பிள் சாப்பிடும் போது அவருக்கு அதிக பயன்பாடு கிடைகிறது. மேலும் ஐந்தாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடு பூஜ்ஜியம் ஆகும். ஆறாவது, ஏழாவது ஆப்பிளை நுகர்ந்தால் அவர் பெறுவது எதிர்மறை பயன்பாடாகும்.

**வரைபடம்**

**அட்டவணை**

**வரைபட விளக்கம்**

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது, இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும்.
2. மொத்த பயன்பாடு குறையும்போது, இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.

**முக்கியத்துவம்.**

1. பொருளியலில் பல விதிகளுக்கு இது அடிப்படை ஆகும்.
2. நிதி அமைச்சருக்கு உதவுகிறது.

**திறனாய்வு.**

1. பயன்பாட்டை அளவிடமுடியாது.
2. தொடர்ந்து நுகர்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை.

**42. ஆ)**

1. சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.
2. சிறுதொழில் தரும் சமமான மண்டல வளர்ச்சி.
3. உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது.
4. மூலதன பயன்பாடு முழுமைபெற சிறுதொழில் வழிவகுக்கிறது.
5. சிறுதொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது.
6. சிறு தொழில் நிறுவனங்கள் நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுகின்றன.
7. தொழில் முனைவோர்களை உருவாக்குகின்றன.
8. சிறு தொழில் நிறுவனங்கள் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஆதரவு தருகின்றன.

**43. அ.)**

***சம அளவு உற்பத்தி கோடு***

*சம அளவு உற்பத்தி கோடு என்பது இரு உற்பத்தி காரணிகளை பல்வேறு கலவைகளில் பயன்படுத்தி ஒரே அளவு உற்பத்தி செய்வதை குறிக்கும்.*

***சம அளவு உற்பத்தி கோட்டின் இயல்புகள்***

1. *இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ் நோக்கி செல்லும்.*
2. *தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.*
3. *ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளாது.*
4. X *அச்சினையோ அல்லது* Y *அச்சினையோ தொடாது.*

**43. ஆ)**

1. *சமூக நலத்தை அடைவதே முதன்மையான நோக்கம்.*
2. *வேளாண்மை, சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் விரிவுபடுத்துவதற்கும் நிதி தேவைப்பட்டது.*
3. *தனியார் முற்றுரிமையை கட்டுப்படுத்த.*
4. *வங்கிகள் எளிதாக கடன் அளிப்பதற்கு பேருதவியாக இருந்தன.*
5. *வருமான ஏற்றத் தாழ்வுகளை கட்டுப்படுத்த உதவுகின்றன.*
6. *கிராமப்புற மக்களிடையே வங்கி செயல்பாடுகளை ஊக்குவித்தல்.*
7. *கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் பல புதிய வங்கிக் கிளைகள் தொடங்கப்பட்டன.*
8. *வேளாண் துறை மற்றும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்கு தேவையான கடன்களை வங்கிகள் கொடுக்க ஆரம்பித்தன.*

**44. அ.)**

**மொத்தச் செலவு = $10+Q^3$, எனில்**

$AC = TC/Q$ \

$= 10/Q + Q^3/Q$ $Q = 3$ எனில்

$AC = 10/3 + 3^3/3$

$AC = 3.33 + 9 = 12.33$

**$AC = 12.33$**

**$TFC = 10$**

$AFC = TFC / Q$, $Q = 3$ எனில்

$AFC = 10 / 3 = 3.33$

**$AFC = 3.33$**

$TVC = Q^3$

$AVC = TVC / Q$

$AVC = Q^3 / Q$ $Q = 3$ எனில்

$AVC = 3^3 / 3 = 9$

**$AVC = 9$**

**44. ஆ)**

***நோக்கங்கள்***

1. *அன்னிய நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல்.*
2. *பன்னாட்டு வியாபாரத்தில் மற்றும் உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்.*
3. *கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்.*
4. *வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.*
5. *கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.*

***பண்புகள்***

1. *பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்.*
2. *தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.*
3. *நெறி முறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்.*
4. *தனிப்பட்ட விருப்பப் பகுதியைக் கொண்டது.*
5. *தாராளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது.*

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**45. அ.)**

***சில்லோர் முற்றுறிமை.***

*இங்கு சில நிறுவனங்களே ஒரே மாதிரியான அல்லது வித்தியாசமான பண்டங்களை உற்பத்தி செய்யும். **எ.கா** எண்ணெய் மற்றும் வாயு.*

***இயல்புகள்.***

1. *பெரிய நிறுவனங்கள் உற்பத்தி மற்றும்தேவையைக் கட்டுப்படுத்தும்.*
2. *சார்புத்தன்மை. ஒரு நிறுவனத்தின் விலை மற்றும் உற்பத்தி தீர்மானம் அதன்போட்டி நிறுவனத்தின் செயல்பாடுகளைச் சார்ந்திருக்கும்.*
3. *குழுவாகச் செயல்படவேண்டியதில்லை.*
4. *விளம்பரச் செலவின் அவசியத்தை அறிந்திருப்பர்.*
5. *பண்டத்தின் தன்மை ஒரே மாதிரியான பொருள் உற்பத்தி ஆகும்*
6. *விலையில் மாற்றமில்லை*

**45. ஆ)**

**1.*வேளாண்மையை சார்ந்திருத்தல்:*** *ஊரகப் பொருளாதாரம் இயற்கையையும் வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது.*

**2. *ஊரக மக்களின் வாழ்க்கை முறை:*** *பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மை நிலையிலும் பரிதாபகரமாகவும் உள்ளது.*

**3. *மக்கள் தொகை அடர்த்தி:*** *மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவி காணப்படுகின்றன.*

**4. *வேலைவாய்ப்பு:*** *பருவகால வேலையின்மை மற்றும் குறைவேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன.*

**5.*வறுமை:*** 2011-12 *மதிப்பீட்டின்படி ஊரக பகுதிகளில் சுமார்* 22 *கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கின்றனர்.*

**6. *கடன் சுமைகள்:*** *"ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்து கடனையே விட்டுச் செல்கின்றான்". எனவே கிராம மக்கள் கடனில் மூழ்கி தற்கொலைக்கு ஆளாகின்றனர்.*

**7. *ஏற்றத்தாழ்வு:*** *ஊரகப் பகுதிகளில் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகிறது.*

**46. அ.)**

***இலக்கணம்***

*“வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும்”*

***டேவிட் ரிக்கார்டோ***

***விளக்கம்***

*ரிக்கார்டோ வாரக்கோட்பாட்டை குடியேற்றத்தின் மூலம் விளக்குகிறார். மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் செழுமையான நல்ல நிலத்தையே பயிர் செய்வர் அதிக மக்கள் குடியேறும் போது நிலத்தின் தேவை அதிகரிக்கும் அதனால் இரண்டாம் தர நிலத்தை அவர்கள் பயிர் செய்வர்.இந்நிலையில் முதல் தர நிலம் வாரத்தைப் பெறும். மக்கள்தொகை அதிகரிப்பதால், மூன்றாம் தர நிலமும் பயிர் செய்யப்படும். அப்பொழுது இரண்டாம் தர நிலம் வாரத்தைப் பெறும்.மேலும் முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும். மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத் தையும் பெறாது. இது வாரமில்லா நிலம் இதை வரைபடம் மூலம் விளக்கலாம்.*

***வரைபடம்***

***வரைபடவிளக்கம்***

**1. *முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும்.***

**II. *இரண்டாம் தர நிலம் குறைந்த வாரத்தைப் பெறும்.***

**III. *மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம்***

***திறனாய்வு.***

1. *தொடர்ந்து பயிர் செய்யப்பட்டால் நிலத்தின் செழுமை குறையும்.*
2. *உழைப்பு, முதல் ஆகியவற்றிக்கும் வாரம் உள்ளதாக நவீன பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.*
3. *ஒரு நிறுவனத்தைப் பொருத்தவரை வாரம் விலையோடு அடங்கும்.*
4. *நிறைவுப்போட்டி என்பது நடைமுறையில் இல்லை.*

**46. ஆ)**.

1. தமிழ்நாடு மிகச்சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது.
2. நாட்டில் உள்ள நகரங்கள் கிராமப்புறங்களில் மற்றும் வேளாண் அங்காடி பகுதிகளை இணைக்க கூடிய தரமான சாலை போக்குவரத்தை கொண்டுள்ளது.
3. மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கி.மீ. தொலைவினை இணைக்கின்றன.
4. தங்க நாற்கர திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது.
5. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
6. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் ஆர் 6693 கி.மீ. ஆகும்.
7. சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதிவிரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
8. பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது.

**47. அ.)**

**1. மக்கள் தொடர்புடைய பிரச்சினை:** எழுத்தறிவின்மை, நம்பிக்கைகுறைவு, ஆகியனஊரகமக்களின்பிரச்சினைகள்.

**2. வேளாண்மைசார்ந்தபிரச்சனைகள்:** i.நிலங்கள் துண்டாடப்பட்டு சிறிது சிறிதாக இருத்தல்

ii. போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மை iii. பழமையான தொழில்நுட்ப முறைகள்.

**3. உள் கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகள்:** நீர், மின்சாரம், போக்குவரத்து, தகவல்தொடர்பு, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.

**4. பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்:** குறைவான வருமானம், கடன்சுமை ஆகியவை பொருளாதார ம்சார்ந்த பிரச்சினைகளாக உள்ளது

**5. நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகள்**: குறைந்தகூலி. வரவுசெலவுகளை சரிவர முறையாக பயன்படுத்தாமை ஆகியவை நிர்வாகச்சிக்கல்கள் ஆகும். போதியதொழில்நுட்பஅறிவின்மை,

**47. ஆ)**

1.மின்னாற்றலை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பிறதென் மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது.
2.கல்பாக்கம், கூடங்குளம் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணுமின் நிலையங்களாகும்
3. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வெப்ப ஆற்றலில் அதிக அளவு அத்திப்பட்டு எண்ணூர், மேட்டூர், நெய்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது
4. அனல்மின் உற்பத்தியில், தமிழ்நாடு தேசிய உற்பத்தியில் 34% க்கும் மேலாக உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது.
5. தமிழ்நாட்டில் 20-க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது.
6. கருந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமான புனல் மின் நிலையங்கள் ஆகும்.
7. தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது.
8. தென்தமிழகம் சூரிய மின்சக்தி திட்டங்களைச் செயல்படுத்த உகந்த மண்டலமாகக் கருதப்படுகிறது
9. இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்டமாநிலமாகஉள்ளது.
10. காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏதுவான இடமாக திருநெல்வேலி, தூத்துக்குடியின் தெற்குப் பகுதி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன.